(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023

National Field Work Centre, Thondaimanaru.

NFWC

5th Term Examination - 2023

கணக்கீடு - I Accounting - I	Two Hours Gr -13 (2023)	33 T I

பகுதி – I

01) நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீடு தொடர்பில் பின்வருவனவற்றுள் எக் கூற்று/ கூற்றுக்கள் சரியானது/ சரியானவை?

A. தீர்மானமெடுத்தலுக்கு வரலாற்றுத் தகவல்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது

B. தீர்மானமெடுத்தல், திட்டமிடல், கட்டுப்படுத்தல் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படுகின்றது.

C. கணக்கீட்டு நியமங்கள், மற்றும் சட்டத் தேவைப்பாடு என்பவற்றை கருத்தில் கொள்கின்றன.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, C ஆகியன (5) A, B, C, ஆகியன எல்லாம் (………)

02) பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களில் எது வணிகமொன்றில் நிதி நிலைமைக் கூற்றில் இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி நடைமுறைச் சொத்தாக வெளிப்படுத்தல் தொடர்பான அடிப்படை எண்ணக்கருவாக அமைவது?

(1) பாதுகாப்பு (2) அட்டுறு (3) வரலாற்றுக்கிரயம்
(4) தொடர்ந்து இயங்குதல் (5) இணைதல் (………)

03) வணிகம் ஒன்று விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புக என்னும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விற்பனையை வருமானமாகக் கணக்குகளில் பதியப்படவில்லை. இதற்கு பின்பற்றப்பட்ட எண்ணக்கரு எது?

(1) கைத்தேறல் எண்ணக்கரு (2) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
(3) பாதுகாப்பு எண்ணக்கரு (4) வெளிப்படுத்தல் எண்ணக்கரு
(5) சேர்மதியக் கோட்பாடு (………)

❖ **4ஆம் 5ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஐங்கரன் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

- 01.03.2023 சிவனிடமிருந்து கடனிற்கு அலுவலகப் பயன்பாட்டிற்கு ரூபா 300,000 கிரயமான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- 05.03.2023 பார்வதியிடம் ரூபா 40,000 கிரயமான வியாபார இருப்புக்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
- 12.03.2023 ரூபா 5000 கிரயமான பண்டங்கள் பார்வதிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.
- 15.03.2023 சிவனுக்கு ரூபா 180,000 காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டது.
- 04.04.2023 பார்வதிக்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையும் 10% காசு கழிவு பெற்று காசோலை மூலம் தீர்க்கப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) ஐங்கரன் வியாபாரத்தினது புத்தகங்களில் மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை.
(1) பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவுக் கைச்சாத்து
(2) நாட்குறிப்பு கைச்சாத்து, கொள்வனவு பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவுக் கைச்சாத்து
(3) விற்பனைப்பட்டியல், கொள்வனவுப் பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(4) நாட்குறிப்பு கைச்சாத்து, பற்றுச்சீட்டு, வரவுத்தாள்
(5) கொள்வனவுப்பட்டியல், உறுதிச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள் (………)

05) 31.03.2023 உள்ளவாறான ஐங்கரன் வியாபாரத்தில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைக் காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு.

	நடைமுறையல்லாத சொத்துக்கள்	+	நடைமுறைச் சொத்துக்கள்	=	உரிமையாண்மை	+	பொறுப்புக்கள்
(1)	+ 300,000	+	- 140,000	=	- 5000	+	155000
(2)	+ 300,000	+	- 145,000	=	-----	+	155000
(3)	+ 300,000	+	181,500	=	+ 3500	+	115000
(4)	+ 300,000	+	- 186,500	=	- 1500	+	115000
(5)	+ 300,000	+	- 140,000	=	- 1500	+	161500

(………)

❖ **6ஆம், 7ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பெறுமதி சேர்வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்ட கம்பனியான சீமான் லிமிட்டெட் 20.03.2023 இல் ஆதவன் கம்பனியிடமிருந்து கடனுக்கு ரூபா 784,000 பொருட்களை மீள்விற்பனைக்காக கொள்வனவு செய்தது. இவ் கொள்வனவுப் பட்டியல் பெறுமதியானது 12% பெறுமதிசேர் வரியை (VAT) உள்ளடக்கியுள்ளது. பழுதடைவுகள் காரணமாக ரூபா 96000 பட்டியல் விலை கொண்ட பண்டங்களை சீமான் லிமிட்டெட் திருப்பி அனுப்பியது. 30.03.2023 சீமான் லிமிட்டெட் ஆதவன் கம்பனிக்கு முழுத்தொகையினை தீர்ப்பதற்காக காசோலை ஒன்றினை வழங்கியது.

06) மேலே குறிப்பிட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் அவை ஏற்பட்ட ஒழுங்குவரிசையில் "ஆதவன் கம்பனி" புத்தகங்களில் பதிவு செய்வதற்கான மூல ஏடுகளின் ஒழுங்கு வரிசை.
(1) விற்பனை நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு
(2) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு
(3) விற்பனை நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
(4) கொள்வனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
(5) பொது நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு (………)

07) 20.03.2023 இல் கொள்வனவு பொருட்களை சீமான் லிமிட்டெட்டின் புத்தகங்களில் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப்பதிவு.

	கணக்குகள்	**வரவு (ரூ 000)**	**செலவு (ரூ 000)**
(1)	கொள்வனவுக் கணக்கு VAT கட்டுப்பாட்டு கணக்கு கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு	700 84	 784
(2)	கொள்வனவுக் கணக்கு கடன் கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு	784	 784
(3)	கடன் படுநர் கட்டுப்பாட்டு கணக்கு விற்பனைக் கணக்கு	700	 700

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(4)	கடன் படுநர் கட்டுப்பாடு விற்பனைக் கணக்கு VAT கட்டுப்பாட்டு கணக்கு	784	 700 84
(5)	கொள்வனவுக் கணக்கு VAT கட்டுப்பாட்டுக் கணக்கு கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு	784	 84 700

(………)

❖ **8ஆம், 9ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் கவியரசி வணிகத்தின் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரைபு நிதிக்கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டனவாகும்.

	ரூபா 000
விற்பனைகள்	1450
விற்பனைக்கிரயம்	600
நிர்வாக செலவுகள்	350
விநியோக செலவுகள்	150
நிதி, ஏனைய செலவுகள்	100

எனினும் வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்த பின்னர் பரிசீலனையின் போது பின்வருவன வெளிப்படுத்தப்பட்டன.

- 2023.03.31 உள்ளவாறு விற்பனை மேம்படுத்தல் செலவு ரூ80,000 விற்பனைக்கிரயக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் சென்மதியாகவுள்ள விற்பனை மேம்படுத்தல் செலவு ரூபா 20000 கணக்குகளில் பதியப்படவில்லை.
- 2023.01.01 இலிருந்து 6 மாதங்களுக்கு செலுத்திய விநியோக வான் வாடகைக் கட்டணம் ரூபா 75000 நிர்வாக செலவொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

08) தேவையான சீராக்கல்கள் செய்த பின் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான சரியான நிர்வாக செலவும், விநியோக செலவும்

	நிர்வாக செலவீனம் (ரூ 000 ல்)	விநியோகக்கிரயம் (ரூ 000 ல்)
(1)	275.	325
(2)	312.5	250
(3)	312.5	225
(4)	275	287.5
(5)	312.5	187.5

(………)

09) தேவையான சீராக்கல்களைச் செய்த பின்னர் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம்.

(1) ரூபா 287 500 (2) ரூபா 267 500 (3) ரூபா 187 500
(4) ரூபா 247 500 (5) ரூபா 305 000 (………)

10) சிட்டு வணிகத்தின் கணக்குப் புத்தகங்களில் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

A. விற்பனை நாளேடு ரூபா 5000 கூட்டிக் கூட்டப்பட்டது.

B. காசுக் கொடுப்பனவு நாளேட்டு கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூ4500 பேரேட்டுக் கணக்குகளில் ரூபா 5400 எனப் பதியப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

C. செலுத்திய விளம்பரக் கட்டணம் ரூ15000 விளம்பரக் கணக்கில் ரூபா 1500 எனப் பதியப்பட்டது.

D. குசேலருக்கு கொடுத்த கழிவு ரூ1500 காசு பெறுவனவு நாளேட்டின் கழிவு நிரலில் ரூ150 என பதியப்பட்டது.

மேலே தரப்பட்ட வழுக்களில் தொங்கல் கணக்கினை தோற்றுவிக்காத வழு/ வழுக்கள் எது/ எவை?

(1) A, B, C (2) B, C, D (3) B, C (4) A, B, D (5) C மட்டும் (………)

11) சியாமளா வணிகத்தின் 31.03.2023 இல் கணிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் கிரயம் ரூபா 120,000, எனினும் பின்வரும் விடயங்கள் இருப்பு கணிப்பிடும் போது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

- ❖ நிறுவனத்தில் இருந்த இருப்புக்களுள் ரூபா 20000 இருப்புக்கள் பழுதடைந்தவையாக காணப்பட்டன.
- ❖ விற்பனை இன்றேல் திரும்பல் அடிப்படையில் ஏடுகளில் விற்பனையாக பதியப்பட்டு ரூ30000 பட்டியல் விலை இட்டு அனுப்பப்பட்ட பண்டங்கள் 31.03.2023 வரை விற்கப்படாது திரும்பி வருவதாக இருந்தது. இந்நிறுவனம் கிரயத்துடன் 25% இலாபம் சேர்த்து விற்பனை விலை குறிப்பது வழக்கம்.
- ❖ 28.03.2023 இல் ரூபா 20000க்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் கொள்வனவாக பதிவு செய்த போதும் 2023.03.31 வரை நிறுவனத்தை வந்தடையவில்லை.

2023.03.31 இல் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய இறுதிச் சரக்கிருப்பின் சரியான பெறுமானம்.

(1) ரூபா 144,000 (2) ரூபா 150,000 (3) ரூபா 94,000
(4) ரூபா 114,000 (5) ரூபா 85,000 (………)

12) உற்பத்தி நிறுவனமொன்றின் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்திக்கிரயம், உற்பத்தி மேந்தலைக்கிரயம் முறையே ரூபா 870,000 , ரூபா 150,000 ஆகும். உற்பத்திக் கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள குறைவேலை இருப்புக்கள் 2022.04.01, 2023.03.31 இல் முறையே ரூபா 220,000 , ரூபா 170,000 ஆக இருந்தது.

2023.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான முதன்மைக் கிரயம் யாது?

(1) ரூபா 670,000 (2) ரூபா 720,000 (3) ரூபா 680,000
(4) ரூபா 770,000 (5) ரூபா 650,000 (………)

13) சக்திவேல் வணிகம் VAT(பெறுமதி சேர்வரி) பதிவு செய்யப்பட்டது ஆகும். இக்கம்பனியின் 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்திற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	(000 ல்)
1.4.2022 இல் வியாபாரக் கொடுக்குமதிகள்	110
31.3.2023 இல் வியாபாரக் கொடுக்குமதிகள்	80
வெளித்திரும்பல்(10% VAT உள்ளடங்கலாக)	132
கடன் கொள்வனவு (VAT நீங்கலாக)	1500
பெற்ற கழிவு	100

31.03.2023 இல் முடிவடைந்த வருடத்தில் வியாபார கொடுக்குமதிகளுக்காக செலுத்திய தொகை யாது?

(1) ரூபா 1436,000 (2) ரூபா 1310,000 (3) ரூபா 1418,000
(4) ரூபா 1460,000 (5) ரூபா 1448,000 (………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14) இலாப நோக்கற்ற வணிகங்கள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?

A. வணிகத்தின் வருமான மிகையானது உரிமையாண்மையின் பகுதியொன்றாகும்.

B. வணிகத்தினால் முற்பணமாக பெறப்பட்ட சந்தா பொறுப்பாக இனங்காணப்படும்.

C. இவ் வணிகங்கள் இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளை பேணுவதில்லை.

D. வணிகங்களில் விசேட தேவைக்காகப் பெற்ற நிதி உரிமையாண்மையின் பகுதியொன்றாகும்.

(1) B, C, D (2) A, B, D (3) B, D (4) A, D (5) A, B, C, D

(………)

15) பின்வரும் கூற்றுக்களில் எது பங்குடமை ஒன்று தொடர்பில் சரியானது.

A. பங்குடமையில் உடமையில் மாற்றமொன்று ஏற்படும் போது அதன் நன்மதிப்பு மதிப்பிடப்படுகின்றது.

B. பங்குடமையானது நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமங்களை பின்பற்றக்கூடாது.

C. காசுப்பாய்ச்சல் கூற்றானது பங்குடமைக்கு என தயாரிக்க முடியும்.

D. பங்குடமையில் இலாபத்தினை பகிர்ந்தளிக்கும் போது பங்காளரின் பொருள் பற்றுக்கள் சீராக்கப்படுதல் வேண்டும்.

(1) A, C (2) B, C, D (3) B, D (4) A, B, C (5) C, D (………)

❖ **பின்வரும் தரவுகளைக் கொண்டு 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.**

அனு, பானு, சானு ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 3 : 2 : 1 எனப் பகிர்ந்து நடாத்திச் சென்ற பங்குடமையில் இருந்து 2022.04.01 இல் சானு ஓய்வு பெற்றதுடன், அத்தினத்தில் மதிப்பிடப்பட்ட பங்குடமையின் நன்மதிப்பானது மூலதனக் கணக்கினூடாக சீராக்கப்பட்டது.

சானுவின் மொத்த உரிமை ரூபா 200,000 வில் 10% அவரது கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது. 2022.04.01 இல் பங்காளரது நடைமுறைக்கணக்கு மீதிகள் முறையே ரூபா 75000, ரூபா 50000, ரூபா 25000 ஆகும். அத்தினம் அனு, பானு ஆகியோரின் மூலதனக்கணக்கு மீதிகளின் மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 600000 ஆகும். 2023.03.31 இல் இம் மீதி ரூ 575,000 ஆகும்.

அனுவும், பானுவும் பங்குடமை வியாபாரத்தினை 3 : 2 என்ற இலாப நட்ட பகிர்வுடன் பங்குடமையை தொடர்ந்து நடாத்த தீர்மானித்ததுடன் ஆரம்ப மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 10% வட்டி வழங்குதல், பங்காளர் மாதாந்த சம்பளம் தலா ரூபா 10000 வழங்குதல் தொடர்பில் உடன்பட்டனர். ஆண்டுக் காலத்தில் உழைக்கப்பட்ட இலாபம் ரூ 380000 ஆகும்.

16) 2022.04.01இல் சானுவின் ஆரம்ப மூலதன மீதி

(1) ரூபா 125,000 (2) ரூபா 150,000 (3) ரூபா 175,000

(4) ரூபா 200,000 (5) ரூபா 225,000 (………)

17) 2023.03.31 இல் அனு, பானு ஆகியோரது இறுதியாக பகிரப்பட்ட இலாபப் பங்குகள் முறையே,

	அனு	பானு
(1)	36000	24000
(2)	48000	32000
(3)	72000	42000
(4)	168000	112000
(5)	180000	120000

(………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18) LKAS – 01 (நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்) இன் பிரகாரம் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை?

A. நிறுவனமொன்று அதன் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் அட்டுறு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும்.

B. நிறுவனமொன்று நிதிக் கூற்றுக்களின் தொகுதியில் உள்ள எல்லா நிதிக் கூற்றுக்களையும் சம அளவு முக்கியத்துவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

C. நிறுவனமொன்று நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது வேறொரு நியமத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றிச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் எதிரீடு செய்யக் கூடாது.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, C மாத்திரம் (5) B, C மாத்திரம் (………)

❖ **19ஆம் 20ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

தொலைக்காட்சிப் பெட்டிகள், கண்காணிப்பு கமராக்களை விற்பனை செய்யும் துலாஞ்சலி பொதுக்கம்பனி வணிகத்தில் 2023.03.31 இல் உள்ளவாறு இருப்புக்கள் பின்வருமாறு

இருப்புக்கள் உருப்படி	கிரயம்(ரூபா000ல்)	தேறிய நிகரத்தக்க பெறுமதி(ரூ000ல்)
தொலைக்காட்சிப் பெட்டிகள்	1200	1300
கண்காணிப்பு கமராக்கள்	1850	1600

2023.03.31 இல் முடிவடைந்த வருடத்தில்

- விற்பனைகள் ரூபா 98 500 000
- விற்பனையில் 10% மொத்த இலாபம் உழைக்கப்படுகின்றது

19) LKAS – 02 (இருப்புக்கள்) நியமத்தின் படி 2023.03.31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் சொத்தாக முன்கொண்டு செல்லப்படும் இருப்பு பெறுமதி யாது?

(1) ரூபா 3050,000 (2) ரூபா 2900,000 (3) ரூபா 3150,000
(4) ரூபா 2800,000 (5) ரூபா 2550,000 (………)

20) 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டு இப்பொருட்களின் விற்பனை வருமானத்துக்கெதிராக இருப்புக்கள் தொடர்பான மொத்தச் செலவு யாது?

(1) ரூபா 88,900,000 (2) ரூபா 88,650,000 (3) ரூபா 250,000
(4) ரூபா 9850,000 (5) ரூபா 2800,000 (………)

21) LKAS – 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) நியமத்திற்கு அமைய காசு, காசுக்கு சமமானவை என்பதனுள் உள்ளடங்குவது?

A. கையில் உள்ள காசு

B. மூன்று மாத முதிர்வு கொண்ட திறைசேரி உண்டியல்

C. கேள்விவைப்பு

D. மூன்று மாத முதிர்வுக்கு குறைவான நிலையான வைப்பு

E. சாதாரண பங்குகள் மீதான முதலீடு

(1) A மட்டும் (2) A, B மட்டும் (3) A, C மட்டும்
(4) A, B, C, D மட்டும் (5) A, B, C, D, E அனைத்தும் (………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) LKAS – 08 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம் மற்றும் வழுக்கள்) நியமத்திற்கு அமைய கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாக கருத முடியாதது
A. பயன்படு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி அதிகரித்தல்
B. எதிர்வரும் வருடம் முதல் ஒடுங்குபாக முறையில் பெறுமானத் தேய்விடல்
C. செயற்பாடுகள் தேறிய பின்பே வருமானமாக இனங்காணல்
D. விற்பனை அடிப்படையில் உத்தரவாத வீதம் அதிகரித்தல்
(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்
(4) A யும் C யும் (5) A, B, D மட்டும் (………)

23) SLFRS – 16 (நிதி அறிக்கையிடல் நியமம் - 16) குத்தகையின்படி சொத்து பயன்படுத்தும் உரிமையின் கிரயம் தொடர்பில் பின்வருவனவற்றுள் உள்ளடக்கப்படாதவை எது?
(1) குத்தகைப் பொறுப்பின் ஆரம்ப மதிப்பீட்டில் கணிப்பிடப்பட்ட நிகழ்காலப் பெறுமதி
(2) குத்தகைத் தவணைக் கட்டணங்களில் உள்ளடக்கிய குத்தகை வட்டி
(3) குத்தகை ஆரம்பிக்கும் தினத்தில் அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட செலவுகள்
(4) குத்தகை இறுதியில் சொத்து அகற்றப்படுவதற்கு செலவு ஏற்படுமாயின் அத்தொகை
(5) குத்தகை கொள்வனவாளர் செலுத்தியுள்ள ஆரம்பக்கிரயம். (………)

❖ **24ஆம் 25ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையறுத்த செவ்வேள் பொதுக்கம்பனியில் 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள் வருமாறு

- முதல் தடவை காணி ரூபா 400000 மிகையாக மதிப்பிடப்படடது.
- முதல் தடவை ரூபா 100000 மிகையாக மதிப்பிடப்பட்ட அலுவலக சாதனங்கள் தற்போது இரண்டாம் தடவையாக ரூபா 150000 குறைத்து மீள மதிப்பிடப்பட்டது.
- இடைக்காலத்தில் செலுத்திய பங்கு இலாபம் ரூபா 50000.
- ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல் பங்கு வழங்கல் தொடர்பில் கூறப்பட்ட மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 180000 (நிறுத்தி வைத்த வருவாய் பயன்படுத்தப்பட்டது.)
- உரிமைப்பங்கு வழங்கல் தொடர்பில் கூறப்பட்ட மூலதன அதிகரிப்பு ரூபா 200000.

24) 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் மொத்தமுற்றும் அடக்கிய வருமானத்தில் (மேற்தரப்பட்ட தகவல்கள் தொடர்பில்) ஏற்பட்ட அதிகரிப்பு யாது?
(1) ரூபா 300,000 (2) ரூபா 250,000 (3) ரூபா 200,000
(4) ரூபா 400,000 (5) ரூபா 350,000 (………)

25) 2023.03.31 இல் நிறுத்தி வைத்த வருவாயில் ஏற்பட்ட குறைவு யாது?
(1) ரூபா 280,000 (2) ரூபா 100,000 (3) ரூபா 500,000
(4) ரூபா 230,000 (5) ரூபா 180,000 (………)

26) பின்வரும் எவ்விகிதங்களின் அடிப்படையில் வணிகத்தின் திரவத்தன்மை மற்றும் நீண்ட கால நிதி உறுதித்தன்மை என்பவற்றை மதிப்பிடலாம்?
(1) கடன்படுநர் புரள்வு விகிதம், விரைவு விகிதம்
(2) நடைமுறை விகிதம், கடன் உரிமை விகிதம்
(3) கடன் விகிதம், வட்டிக்காப்பு விகிதம்
(4) நடைமுறை விகிதம், மொத்த சொத்து மீதான திரும்பல் வீதம்.
(5) கடன் விகிதம், நடைமுறை விகிதம் (………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **27 ஆம், 28 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

உற்பத்திக்கம்பனி ஒன்று தனது விசேட வகையான மூலப்பொருள் தொடர்பான வழங்கலை விலையிடுவதற்கு நிறையளித்த சராசரி முறையை பயன்படுத்துகின்றது. 2023 மார்ச் மாதத்திற்கான மூலப்பொருள் உருப்படியொன்றின் தகவல்கள் பின்வருமாறு.

திகதி	விபரம்	அளவு (அலகுகள்)	விலை
01.03.2023	மீதி	2000	10
08.03.2023	கொள்வனவுகள்	8000	15
17.03.2023	கொள்வனவுகள்	10000	12
25.03.2023	விநியோகம் (தொழிற்சாலைக்கு)	15000	?

தொழிற்சாலையிலுள்ள இருப்புக்கள்
01.03.2023 இல் 3000 அலகுகள்
31.03.2023 இல் 330 அலகுகள்

27) 31.03.2023 முடிவடைந்த மாதத்தில் பயன்படுத்திய மூலப்பொருள் பெறுமதியும் நாளொன்றுக்கு சராசரியாக பயன்படுத்திய மூலப்பொருள் அலகுகளுள் சரியானது?

	பயன்படுத்திய மூலப்பொருள் பெறுமதி(ரூபா)	நாளொன்றுக்கான சராசரி உற்பத்தி நுகர்வு (அலகுகள்)
(1)	195,000	570
(2)	225,000	500
(3)	220,710	570
(4)	225,000	600
(5)	195,000	500

(………)

28) மூலப்பொருள் விநியோக முறையினை நிறையளித்த சராசரி முறையில் (WAC) இருந்து முதல் உள் முதல் வெளியே (FIFO) முறைக்கு மாற்றப்படுமாயின் 31.03.2023 ல் உள்ள நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் மூலப்பொருள் இருப்பு பெறுமதி தொடர்பாக சரியானது?

(1) ரூபா 63,960 (2) ரூபா 69,290 (3) ரூபா 60,000
(4) ரூபா 65,000 (5) ரூபா 50,000 (………)

29) கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ஊதியம் தொடர்பில் கவனத்தில் கொள்க.

A. கல்லூரி ஒன்றில் ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படும் சம்பளம்.
B. ஆடைதயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் துணி வெட்டுபவருக்கான சம்பளம்.
C. தேயிலை உற்பத்திக் கம்பனி ஒன்றில் கொழுந்து பறிப்போரின் சம்பளம்.
D. வெதுப்பகம் ஒன்றின் முகாமையாளரின் சம்பளம்.

தரப்பட்டுள்ளவற்றுள் நேர் கூலியாக வகைப்படுத்தக் கூடியவை.

(1) B , C (2) A , C (3) A , B , C (4) A , C , D (5) A , B , C , D (………)

30) கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒன்று தொடர்பான பின்வரும் தகவல்கள் 2023 மே மாதத்துடன் தொடர்புடையவை.

விபரம்	உற்பத்திக்கிரயம்		சேவைக்கிரய நிலையம்
	x	y	
பாதிடப்பட்ட மேந்தலை (ரூபா)	360000	250000	50 000
பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்	13000	13500	-------------
அலகு ஒன்றுக்கு தேவைப்படும் இயந்திர மணித்தியாலம்.	5	3	

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- மேற்குறித்த மாதத்தில் ஏற்பட்ட முதன்மைக் கிரயம் ரூபா 390,000.
- உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 1000
- சேவைக்கிரய நிலைய மேந்தலைகள் உற்பத்திக் கிரய நிலையங்களிடையே (X,Y) முறையே 3 : 2 என மீள் பகிர்வு செய்யப்படுகின்றது.
- இயந்திர மணித்தியால அடிப்படையில் மேந்தலை உறிஞ்சப்படுகின்றது. அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் யாது?

(1) ரூபா 600 (2) ரூபா 210 (3) ரூபா 750 (4) ரூபா 1050 (5) ரூபா 1000

(.………)

(30 x 4 = 120 புள்ளிகள்)

❖ **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31) பின்வரும் கூற்றுக்கள் நிதிக்கணக்கீட்டின் வகிபாகம் தொடர்பில் சரியா **(T)** அல்லது பிழையா **(F)** எனக் குறிப்பிடுக. (சரி / பிழை)

A. நிறுவனத்தின் கடந்தகால, எதிர்கால தகவல்களை வழங்குதல் (……….)

B. அக்கறை உடையோரின் பாவனைக்காக பொது நோக்கு நிதி அறிக்கைகளை தயாரித்தல் (……….)

C. கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளை தயாரித்தல் (……….)

D. குறிப்பிட்ட கணக்காண்டுக்கான தகவல்கள் முன்வைக்கப்படும் (……….)

32) வணிகமொன்றின் சில்லறைக் காசு கட்டுநிதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

சில்லறைக் காசு மீதி 01.01.2023 இல் ரூபா 900
31.01.2023 இல் ரூபா 750
கட்டுநிதி மீள் நிரம்பல் 01.02.2023 இல் ரூபா 7450

பெப்ரவரி மாதம் கட்டுநிதி ரூ 1200 அதிகரிப்புக்கு ஏற்ப மீள நிரப்பப்பட்டது.

(அ) 2023 ஜனவரி மாத கட்டுநிதி யாது?

……………………………………………………………………………………………..

(ஆ) 2023.01.01 இல் கட்டுநிதி மீள் நிரம்பலுக்கான நாட்குறிப்பு பதிவு.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

33) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளைப் பொதுப்பேரேட்டில் வரவு வைக்கும் கணக்கு, செலவு வைக்கும் கணக்கு என்பதை அதற்கு நேரே குறிப்பிடுக.

	வரவுவைக்கும் கணக்கு	செலவு வைக்கும் கணக்கு
(1) கடன்கொடுநர் வரவு மீதிக்கான எதிரீடு	…………………	…………………
(2) கடன் கொடுநருக்கு செலுத்திய காசோலை மறுக்கப்படல்	…………………	…………………
(3) வங்கிக் கூற்றில் காணப்பட்ட நேரடி வைப்பு	…………………	…………………
(4) சம்பளப்பட்டியலில கழிப்பனவு செய்யப்பட்ட சம்பள முற்பணம்.	…………………	…………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34) விதுரன் 01.04.2023 இல் ரூ 150,000 க்கு கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்து அதே தினம் 10% வியாபாரக் கழிவு நீக்கி ரூபா 225,000 கடனுக்கு விற்பனை செய்தார். விற்பனை செலவு ரூ 9000 ஏற்பட்டது. கீழே தரப்பட்ட கணக்கீட்டு சமன்பாட்டில் கொடுக்கல் வாங்கல்களின் தேறிய தாக்கத்தினை காட்டுக.

A. சொத்துக்கள் (ரூபா) ……………………………………

B. பொறுப்புக்கள் (ரூபா) ……………………………………

C. உரிமையாண்மை (ரூபா) ……………………………………

35) பின்வரும் பொதுப் பேரேட்டு கணக்கு ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களின் மூலங்களை குறிப்பிடுக.

கணக்கு	நிதிக்கூற்றுக்களின் மூலம்
A. திரண்ட தேய்மானம்	…………………………………….
B. பற்றுக்கள்	…………………………………….
C. கொடுத்த கழிவு	……………………………………..
D. விற்பனை உத்தரவாத ஏற்பாடு	……………………………………..

36) கீழே உள்ள விடயங்களுக்கு பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினை குறிப்பிடுக

(1) விற்பனைக்கென வாங்கிய மோட்டார் வாகனங்களின் இருப்பு மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டது.

……………………………………………………………………………………………………

(2) சொத்துப் பயன்படுத்தல் உரிமை கணக்கினை நிதி நிலைமைக் கூற்றில் சொத்தாக இனங்கானல்

……………………………………………………………………………………………………

(3) உரிமையாளர் தனது சொந்த நிதியில் கடன் கொடுநருக்கு செலுத்திய காசு மூலதனக் கணக்கில் செலவில் பதிவு செய்தல்

……………………………………………………………………………………………………

(4) விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் விற்பனையாகக் கருதி அனுப்பப்பட்ட பொருட்கள் விற்கப்படாத நிலையிலும், திருப்பி அனுப்பும் காலம் முடிவுறாத நிலையிலும் காணப்படும் இருப்புகள் அவற்றினது தேறிய நிகரத்தக்க பெறுமதியில் சொத்தாக இனங்காணப்பட்டுள்ளமை.

……………………………………………………………………………………………………

37) நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகம் (2018) இன்படி பின்வரும் வசனங்களை பூர்த்தி செய்க.

A. கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வளமொன்றினை மாற்று வதற்கான நிறுவனமொன்றின் நிகழ்காலக் கடப்பாடு ………………………………………. என வரையறுக்கப்படும்.

B. பொது நோக்கு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு வேண்டப்படும் நிறுவனமொன்றானது ……………………………………………. என வரையறுக்கப்படுகின்றது.

C. இனங்காணல் நியதிகளுடன் தொடர்புடைய கணக்கீட்டுத் தகவல்களின் இரண்டு தரரீதியான பண்புகள்……………………………மற்றும் ……………………………. ஆகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

38) பின்வரும் தகவல்கள் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் ஆரபி,ஆர்த்தி பங்குடமை வணிகத்தின் இலாப நட்ட பகிர்வு தொடர்பாக எடுக்கப்பட்டவை ஆகும்.

தேறிய இலாபம்			160,000
இலாபப் பகிர்வு	ஆரபி	80,000	
	ஆர்த்தி	80,000	(160,00)

இப்பகிர்வானது பயிலுனரான கணக்கீட்டு உதவியாளரால் ஒப்பந்தத்தினை கருத்தில் கொள்ளாது பங்குடமைச் சட்டத்தின் 24வது பிரிவு அடிப்படையில் பகிரப்பட்டு நடைமுறைக் கணக்கிலும் பதியப்பட்டது.
பங்குடமை ஒப்பந்தமானது பங்காளர்கள் ஆரபி, ஆர்த்தி முறையே வருடாந்த சம்பளம் ரூபா 60,000, ரூபா 40,000 பகிர்வதும் இலாப நட்டம் ஆரபி, ஆர்த்தி முறையே 2 : 1 என பகிர்வதும் ஆகும்.

மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய நடைமுறைக் கணக்கில் சீர் செய்வதற்கான நாட்குறிப்பு பதிவு தருக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

39) நிறுவனமொன்றின் 2023.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான "நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு" சட்டகத்திற்கேற்ப பின்வருவனவற்றுள் சொத்தொன்றின் பண்புகளில் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் குறிப்பிடுக.

சரி / பிழை

A. பொருளாதார வளப்பரிமாற்றத்தை தரக் கூடியது (……….)

B. வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியது. (……….)

C. பொருளாதாரப் பயன்களை உருவாக்கும் சாத்தியம் கொண்ட நிகழ்கால வளம் (……….)

D. எதிர்கால கொடுக்கல் வாங்கல் மூலம் தோன்றி இருத்தல் (……….)

40) சங்கீதா PLC இன் 31.03.2023ல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று 15.05.2023ல் வழங்குவதற்கு இயக்குநர்களால் அதிகாரமளிக்கப்பட்டது.
LKAS 10 – அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வின் படி 01.04.2023 தொடக்கம் 15.05.2023 வரை இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகள் சீராக்க கூடிய நிகழ்வாக அல்லது சீராக்க முடியாத நிகழ்வா என்பதை குறிப்பிடுக.

	நிகழ்வு	சீராக்ககூடியது	சீராக்கமுடியாதது
A.	31.03.2023ல் காணப்பட்ட மோட்டார் வாகனம் தீப்பற்றியதால் ஏற்பட்ட நட்டம் ரூ 1000000	…………………….	…………………….
B.	சாதாரண பங்குதாரருக்கு இறுதி பங்கு இலாபமாக ரூ 500,000 வழங்க தீர்மானிக்கப்பட்டது.	…………………….	…………………….
C.	ஊழியர் ஒருவரினால் 20.03.2023 ல் தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக 250,000/-நட்டஈடு வழங்க வேண்டும் என நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது.	…………………….	…………………….
D.	ரூபா 2,000,000 ஒதுக்கங்களை மூலதனமாக்கல்	…………………….	…………………….

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

41) கம்பனியொன்று ரூ 110 மில்லியன் பெறுமதி கொண்ட கட்டடமொன்றை 01.04.2022ல் ரூ 100 மில்லியனிற்கு கொள்வனவு செய்தது. இத்திகதியில் கட்டடத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலமானது 50 வருடங்களாகும். இதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த திகதியிலிருந்து இதனை உபயோகப்படுத்த கூடியதாக இருந்த போதிலும் கம்பனியானது 01.01.2022 இல் இருந்து கட்டடத்தினைப் பயன்படுத்த தொடங்கியது. இக்கட்டடத்தின் நியாயப் பெறுமதியானது 31.03.2023ல் ரூ 120 மில்லியனாக இருந்தது.

"LKAS 16 – ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்" ன் படி இக்கட்டடத்துக்கான பின்வருவனவற்றை குறிப்பிடுக.

(அ) இனங்காணலின் போது எத்தொகையால் கட்டடமானது அளவீடு செய்யப்பட்டுள்ளது.
ரூபா மில்லியன் : ……………………………………………………………………………

(ஆ) இக்கட்டடத்தின் பெறுமானத்தேய்வை அளவீடு செய்ய தொடங்க வேண்டிய
திகதி : ……………………………………………………………………………………

(இ) பின்வரும் ஒவ்வொரு மாதிரியும் பயன்படுத்தப்படின் 31.03.2023 இலுள்ளவாறு கட்டடத்தின் கொண்டு செல் மீதி

(i) கிரய மாதிரி : ரூபா மில்லியன்……………………………

(ii) மீள் மதிப்பீட்டு மாதிரி : ரூபா மில்லியன்……………………………

42) LKAS 37 ற்கேற்ப ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் என்பவற்றுக்கு இடையான வேறுபாடுகள் 02 ஐ குறிப்பிடுக.

ஏற்பாடுகள்	நிகழத்தக்க பொறுப்புக்கள்
(01) ……………………………….	………………………………………
	………………………………………
	………………………………………
(02) ……………………………….	………………………………………
	………………………………………
	………………………………………

43) கம்பனியொன்றில் இடம் பெற்ற நிகழ்வுகள் தொடர்பில் உரிமையாண்மை நிறுத்தி வைத்த உழைப்பு, சொத்துக்கள் என்பவற்றில் அதிகரிக்குமா, குறையுமா அல்லது மாற்றமின்மையா என்பதை அதற்கு நேரே குறிப்பிடுக.

		உரிமையாண்மை	**நிறுத்தி வைத்த உழைப்பு**	**சொத்துக்கள்**
A	ஆண்டில் செலுத்திய பங்குலாபம்	…………………	…………………	…………………
B	முதல் தடவை நட்டத்தில் மதிப்பிடப்பட்ட தளபாடங்கள் இரண்டாம் தடவை அதனைவிட குறைந்த பெறுமதியில் மிகையாக மதிப்பிடல்	…………………	…………………	…………………
C	நிறுத்தி வைத்த உழைப்பிலிருந்து ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல்	…………………	…………………	…………………
D	முதல் தடவை காணி மிகையாக மீள் மதிப்பீடு	…………………	…………………	…………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

44) வரையறுத்த சாதனா கம்பனி 2022.04.01 இல் ரூபா 4,000,000 வங்கியில் கடன் பெற்று ரூபா 3,200,000 பெறுமதியான கட்டிடத்தினைக் கட்டியது. இக்கட்டிடம் 2022.10.01 இல் மாதாந்த வாடகை ரூபா 60,000 வீதம் வேறொரு நபருக்கு வாடகைக்கு விட்டமையில் பெற்ற முற்பணம் ரூபா 900,000 ஆகும். 2023.03.31 இல் வங்கிக்கடன் தவணைப் பணம் ரூபா 950,000 செலுத்தப்பட்டன. தவணைப்பணத்தில் உள்ளடக்கிய வட்டி ரூபா 150,000 ஆகும்.
மேலே தரப்பட்ட தகவல்களில் இருந்து

(1) முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசு ரூபா ……………………………

(2) நிதியீட்ட நடவடிக்கையில் உருவாகிய தேறிய காசு ரூபா ……………………………

45) வணிகமொன்றின் 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை ரூபா 12,000,000 ஆகும். இதில் 60 % கடன்விற்பனையாகும். வணிகமானது கிரயத்தில 25 % இலாபம் வைத்து விற்பனை விலையை தீர்மானிக்கின்றது. பின்வரும் தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

	2023.03.31 (ரூபா 000)	2022.03.31 (ரூ 000ல்)
வியாபார வருமதிகள்	800	400
சரக்கிருப்பு	450	350

2023.03.31 இல் பின்வருவனவற்றை கணிக்குக.

(அ) சரக்கிருப்பு புரள்வு விகிதம்………………………………………………………………………

(ஆ) கடன்படுநர் புரள்வு விகிதம்……………………………………………………………………

46) உற்பத்தி வணிகமொன்றின் 2023 யூலை மாதத்துக்கான தகவல்கள் பின்வருமாறு.

	(ரூபா 000)
மொத்த மூலக்கிரயம்	4500
மொத்த உற்பத்தி மேந்தலைகள்	3000
மொத்த உற்பத்தியல்லா மேந்தலைகள்	2000

இவ்வணிகமானது 2023 யூலை மாதத்தில் 10000 அலகுகளை உற்பத்தி செய்தது. அலகு ஒன்றுக்கான மாறும் கிரயம் ரூபா 600 ஆகும்.

(அ) மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 000 …………………………………………………

(ஆ) மொத்தக் கிரயம் ரூபா 000 ……………………………………………….

(இ) மொத்த நிலையான கிரயம் ரூபா 000 ……………………………………………….

47) கீழே தரப்பட்ட ஒவ்வொரு நோக்கத்துடன் தொடர்புடைய மூல ஆவணத்தினை பெயரிடுக.

	நோக்கம்	மூல ஆவணம்
A.	களஞ்சியத்தினால் சரக்குகள் பெறப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்வதற்கு	………………………………………..
B.	உற்பத்தி திணைக்களத்திற்கு தேவைப்படும் மூலப்பொருட்களின் தொகையினை களஞ்சியத்திற்கு அறிவிப்பதற்கு	………………………………………..
C.	பொருட்களை விநியோகிக்குமாறு விநியோகத்தர்களை வேண்டுவதற்கு	………………………………………..
D.	விற்பனை இடம்பெற்றுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு	………………………………………..

.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

48) மூலப்பொருள் M இன் மாதாந்தக் கேள்வி 1500 அலகுகள் ஆகும். அலகுக்கான கட்டளைக் கிரயம் ரூ 400 M பொருளின் அலகொன்றின் கொள்வனவு விலை ரூ40 அலகுக்கான இருப்பு பேணும் கிரயம் அலகுக்கிரயத்தில் 25% ஆகும்.

(அ) M மூலப்பொருளின் சிக்கனக் கட்டளைத் தொகை யாது?

....

(ஆ) M பொருள் தொடர்பான கட்டளையிடல் செலவு யாது?

....

49) ஆடைத் தொழிற்சாலையொன்றில் இயந்திரத்தினை இயக்குபவர் ஒருவருக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூ 50 செலுத்தப்படுவதுடன் மேலதிக நேர மணித்தியால மொன்றுக்கு ரூபா 60 வீதம் செலுத்தப்படுகின்றது. வாரமொன்றுக்கு சாதாரண வேலை மணித்தியலங்கள் 40 ஆகும். இந்த இயந்திர இயக்குபவர் 2023 மார்ச் மாதத்தின முதல் வாரத்தில் 45 மணித்தியாலங்கள் வேலை செய்துள்ளார்.

பின்வருவனவற்றை கணிக்குக.

(அ) இயந்திரம் இயக்குபவரின் 2023 மார்ச் மாதத்தின் முதல் வாரத்துக்கான மொத்தக்கூலி

ரூபா…………………

(ஆ) இயந்திரத்தை இயக்குபவரின் மொத்தக் கூலியை பதிவிடுவதற்கான நாளேட்டுப்பதிவு

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

50) பின்வரும் பொது மேந்தலைகளை பகிர்வதற்குரிய பொருத்தமான பகிர்வு அடிப்படைகளைக் குறிப்பிடுக.

பொது மேந்தலை	பகிர்வு அடிப்படை
(A) கட்டிடப் பராமரிப்பு செலவு	……………………………………………….
(B) சிற்றுண்டிச் சாலை செலவுகள்	……………………………………………….
(C) வெப்ப மேற்றுதல்	……………………………………………….
(D) ஊழியர் சேமலாப நிதிச்செலவீனம்	………………………………………………..

(20 x 4 = 80 புள்ளிகள்)

(மொத்தம் 200 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2023

National Field Work Centre, Thondaimanaru.

5th Term Examination - 2023

NFWC

கணக்கீடு - II
Accounting - II

Three Hours 10 mins

Gr -13 (2023)

33 **T** **II**

பகுதி – II

❖ ***1ம், 2ம் வினாக்கள் கட்டாயமானது. மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்குக.***

01) வரையறுக்கப்பட்ட அமீர் பொதுக் கம்பனியின் ஏடுகளில் இருந்து 31.03.2023 எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு,

விபரம்	வரவு (ரூ.000)	செலவு (ரூ.000)
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	70000	
01.04.2022 இல் சரக்கிருப்பு	2000	
கொள்வனவுகள்	41500	
வியாபார வருமதிகள்	3100	
காசும் காசுக்கு சமமானவை	43030	
விநியோகக் கிரயம்	3800	
நிர்வாகக் கிரயம்	4200	
ஏனைய செலவுகள்	1500	
நிதிக் கிரயம்	200	
செலுத்திய பங்குலாபம்	1700	
செலுத்திய வருமான வரி	2000	
குத்தகை தவணைக் கட்டணக் கொடுப்பனவு	1920	
01.04.2022 ஆதனம் பொறி உபகரண திரண்ட தேய்மானம்		17500
விற்பனைகள்		85000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		40000
01.04.2022 இல் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்		1500
பொது ஒதுக்கம்		600
பகிரப்படாத இலாபம்		7250
12 % வங்கிக்கடன் (2022.10.01 இல் பெறப்பட்டது)		5000
வியாபார சென்மதிகள்		17000
வழக்கு தொடர்பான நட்டஈடு ஏற்பாடு (01.04.2022)		150
வருமான வரி ஏற்பாடு (01.04.2022)		600
வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகளின் ஏற்பாடு		350
	174950	174950

மேலதிக தகவல்கள்

2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வருவன தொடர்பில் சீராக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். (நிதிக்கூற்றுக்களை 2023.06.15 இல் வெளியிடுவதற்கு இயக்குனர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(1) 2023.03.31 இல் இருப்புக்களின் கிரயம் 3500 000 ஆகும். அதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூபா. 3650 000 ஆகும்.

(2) மத்திய சுற்றாடல் அதிகார சபையானது கம்பனிக்கு எதிராக இடப்பட்ட வழக்கு தொடர்பில் தீர்ப்பானது. 2023.04.25 இல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ரூபா 400 000 இழப்பீடு வழங்கும் படி உத்தரவிடப்பட்டது. இது தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடே பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளது.

(3) 2023.03.31 இல் காணப்பட்ட வியாபார வருமதிகளின் ரூபா 200 000 கடன்படுநர் முறிவடைந்ததாக 2023.05.01 நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகளின் ஏற்பாட்டினை ரூபா 300 000 ஆக பேணிச் செல்ல வேண்டும்.

(4) நிகழாண்டு முதல் உத்தரவாத அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் விற்பனையில் 5 % உத்தரவாத ஏற்பாடு செய்ய வேண்டும் என உறுதியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(5) வணிகத்தின் மொத்தச் சொத்துக்களையும் ஒரு தொகுதியாகக் கருதி 01.01.2023 இல் ரூபா 1000 000 க்கு காப்புறுதி செய்யப்பட்டது. 01.01.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான செலுத்தப்பட்ட மொத்த தவணைக் கட்டணமும் நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(6) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு விபரம் வருமாறு,

விபரம்	01.04.2022 ல் கிரயம் / மீள்மதிப்பீட்ட பெறுமதி	01.04.2028 ல் திரண்ட தேய்மானம்
காணி	20 000	-
கட்டடம்	25 000	10 000
தளபாட உபகரணம்	10 000	3 000
மோட்டார் வாகனம்	15 000	4 500
	70 000	17 500

(7) நிகழாண்டில் கையகப்படுத்திக்கொண்ட மற்றும் அகற்றப்பட்ட ஆதனம் பொறி உபகரணங்களின் விபரம் பின்வருமாறு,

- 2022.10.01 இல் 1500 000 கிரயமான கட்டடம் வாங்கப்பட்டது.
- 2000 000 கிரயமானதும், 1600 000 தேறிய புத்தகப் பெறுமதியுடையதுமான 01.04.2022 இல் உபகரணமொன்று 1650 000 இற்கு விற்கப்பட்டது.

  இவை தொடர்பில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

(8) 2022.04.01 இல் காணியானது இரண்டாவது முறையாக 18 000 000 ஆக மீள் மதிப்பிடப்பட்டது. காணி முதற்தடவையாக மீள் மதிப்பிட்டதில் ஏற்பட்ட மிகையே மீள் மதிப்பீட்டு ஒதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

(9) கட்டடம், தளபாட உபகரணங்கள், மோட்டார் வான் என்பன நேர்கோட்டு முறையில் வருடம் 20 % தேய்விடப்படல் வேண்டும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(10) ஆண்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட வருமான வரியினுள் கடந்த வருடத்திற்காக செலுத்திய ரூ.500,000 உம் உள்ளடங்கும். 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான வரி 2300 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

(11) கம்பனியானது 2022.04.01 இல் சொத்துப் பயன்படுத்தும் உரிமை அடிப்படையில் இயந்திரம் ஒன்றினை 4 வருட காலத்திற்கு பெற்றுக்கொண்டது. 01.04.2022 இல் இயந்திரத்தின் பெறுமதி ரூ 4000 000 ஆவதுடன் அதன் பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்கள் ஆகும். 01.04.2022 இல் ஆரம்ப வைப்புத் தொகையாக ரூ 960 000 வும், முதல் வருட தவணைக் கட்டணமாக ரூ 960 000 வும் செலுத்தப்பட்டது. 31.03.2023 மற்றும் 31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான குத்தகை வட்டி முறையே ரூபா 304 000, மற்றும் ரூ 238 000 ஆகும். ஆரம்ப வைப்புத் தொகை மற்றும் முதல் குத்தகைத் தவணைக்கொடுப்பனவு என்பன குத்தகை தவணைக் கட்டணக் கணக்கில் பதியப்பட்டது தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை.

(12) நிர்வாகச் செலவினுள் இயக்குனர் சம்பளம் ரூபா 500 000 உம் கணக்காய்வு கட்டணக்கொடுப்பனவு ரூபா 300 000 உம் உள்ளடக்கப்பட்டுள்ளது. வங்கிக் கடனுக்கான வட்டி அட்டுறுவாக உள்ளது.

(13) ஆண்டுக்காலத்தில் நிறுத்தி வைத்த வருவாயில் இருந்து ரூபா 800 பொது ஒதுக்கத்துக்கு மாற்றுக.

வேண்டப்படுவது

LKAS – 01 (நிதிக்கூற்றுக்களை அறிக்கைப்படுத்தல்) நியமத்துக்கு அமைய வரையறுத்த அமீர் கம்பனியின்

1. 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டம் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று
2. 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று
3. 31.03.2023 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

(40 புள்ளிகள்)

02) அ) தனிப்பொருள் ஒன்றினை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றின் செயற்பாட்டு இயலளவு 2000 அலகுகள் ஆகும். இச் செயற்பாட்டு மட்டத்தில் பாதீட்டு தகவல்கள்.

அலகு ஒன்றுக்கு	**ரூபா**
விற்பனை விலை	1500
நேர் மூலப்பொருள்	260
நேர் ஊழியம் (அலகு அடிப்படை)	300
உற்பத்தி மேந்தலை (அலகு ஒன்றுக்கு)	240
உற்பத்தி அல்லாத மேந்தலை (அலகு ஒன்றுக்கு)	250
வருடாந்த உற்பத்தி நிலையான மேந்தலை	120 000
வருடாந்த உற்பத்தியல்லா நிலையான மேந்தலை	180 000

வேண்டப்படுவது,

1. அலகு ஒன்றுக்கான உற்பத்திக்கிரயம்
2. அலகு ஒன்றுக்கான மாறும் கிரயம்
3. அலகு ஒன்றுக்கான இலாபம்
4. 1500 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் அலகுக்கான மொத்தக் கிரயம்

(10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) பின்வரும் தகவல்கள் 2023 மே மாதத்துக்கான ஊழியர்கள் தொடர்பானவை.

(1) வழமையாக வேலை செய்த 5200 மணித்தியாலங்களுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 100 வீதம் அடிப்படைக்கூலி (இதில் முகாமையாளர் 1300 மணித்தியாலம் வேலை செய்துள்ளார்.)

(2) மேலதிகமாக வேலை செய்த 400 மணித்தியாலங்களுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு ரூபா 200 வீதம் மேலதிக நேர கூடுதல் கொடுப்பனவு.

(3) கட்டளை எண்ணிக்கை அலகுகளுக்கேற்ப விசேட கொடுப்பனவு ரூ 80 000

(4) இலாப அடிப்படையில் மிகைவூதியம் ரூ 120 000

(5) மாதத்துக்கான சம்பள கூலிகளில் இருந்தான கழிப்பனவுகள் பின்வருமாறு,

ஊழியர் சேமலாப நிதி (EPF) பங்களிப்பு அடிப்படைக் கூலியில் - 10 %
ஊழியர் கடன்கழிப்பனவு - ரூ 100 000
சம்பள முற்பண கழிப்பனவு - ரூ 60 000

(6) ஊழியர் சேமலாபநிதிக்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் (ETF) ஆக தொழில் கொள்வோர் பங்களிப்புக்கள் முறையே 15 %, 3 % அடிப்படை கூலியில் கணிக்கப்படுகின்றது.

வேண்டப்படுவது:

1. சம்பளம் கூலிக்கட்டுப்பாடு
2. நேர்கூலிக் கொடுப்பனவு யாது?
3. ஊழியர் தொடர்பான மொத்த செலவு யாது? (10 புள்ளிகள்)

இ) பின்வரும் தகவல்கள் உற்பத்தி கம்பனி ஒன்றினால் பயன்படுத்திய மூலப்பொருட்கள் தொடர்பானவை.

1. 12,000 கிலோ சிக்கனக்கட்டளைத் தொகையானது (EOQ) மறு கட்டளைத் தொகையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
2. ஒரு கட்டளை இடுவதற்கான கிரயம் ரூபா 300 ஆகும்.
3. மூலப் பொருட்களின் வருடாந்தப் பாவனை 120 000 கிலோகிராம்.
4. 2023 யூன் மாதத்திற்கான மூலப்பொருள் பெறுவனவுகள், விநியோகங்களின் சுருக்கம்.

திகதி	விபரம்	தொகை (கிலோ)	குறிப்பு
யூன் 1	மீதி	5000	1000 கிலோ, கிலோ ஒன்று ரூ 15 படி மே 10 இல் கொள்வனவு செய்யப்பட்டது. 4000 கிலோ, கிலோ ஒன்று ரூ 20 படி மே 25 இல் கொள்வனவு செய்யப்பட்டது.
யூன் 8	விநியோகம்	2 000	
யூன் 10	பெறுவனவு	12 000	கிலோ ஒன்று ரூபா 25 படி
யூன் 30	விநியோகம்	10 000	

5. 30 யூன் 2023 இல் மூலப்பொருட்களின் பௌதீக இருப்பு 5200 கிலோகிராம்.
6. மூலப்பொருள் விநியோகத்திற்கு விலையிட "முதல் உள்ளே, முதல் வெளியே முறை" பயன்படுத்தப்படுகின்றது.

வேண்டப்படுவது,

1. 2023 யூன் மாதத்தில் விநியோகம் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மொத்தக் கிரயம்.
2. களஞ்சியப்பேரேட்டின் படி 30 யூன் 2023 இலுள்ள மூலப்பொருள் இருப்பின் கிரயம்.
3. 30 யூன் 2023 இல் மூலப்பொருட்களின் பௌதீக மீதியும் களஞ்சிய பேரேட்டு மீதியும் வேறுபடுவதற்கான சாத்தியமான காரணங்கள் இரண்டினை குறிப்பிடுக.
4. சிக்கனக் கட்டளைத்தொகை மாதிரியின் படி இம்மூலப் பொருட்களிற்கான வருடாந்த கட்டளைக் கிரயம் (10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஈ) உற்பத்திக் கம்பனியின் பாதிடப்பட்ட உற்பத்தி மேந்தலைக்கிரயம் தொடர்பான தகவல் பின்வருமாறு,

உருப்படிகள்	மொத்தம்	உற்பத்தித் திணைக்களம்		சேவை திணைக்களம்
		A	B	
நேரில் மூலப்பொருட்கள்	ரூ 30 000	15 000	15 000	
மின்சாரம்	ரூ 160 000			
வாடகை	ரூ 40 000			
இயந்திரத் தேய்வு	ரூ 60 000			
தளப்பரப்பரப்பு(சதுர அடியில்)	8 000	4 000	2 000	2 000
இயந்திரத்தின் கிரயம் (ரூபா)	1200 000	1000 000	200 000	
இயந்திர மணித்தியாலம்	60 000	50 000	10 000	
நேர் ஊழிய மணித்தியாலம்	50 000	5 000	45 000	

மேலதிக தகவல்கள்:

1. சேவைத் திணைக்கள மேந்தலைகள் உற்பத்தித் திணைக்களங்களிடையே 7 : 3 என்ற விகிதாசாரப்படி பகிரப்படுகிறது.
2. இயந்திர மணித்தியாலங்கள், மற்றும் நேர் ஊழிய மணித்தியாலங்கள் போன்றன மேந்தலை உறிஞ்சலுக்கான பகிர்வு அடிப்படைகளாகும்.
3. ஒரு அலகு பொருளை உற்பத்தி செய்வதற்காக 3 இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் 2 ஊழிய மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது.

வேண்டப்படுவது,

1. மேந்தலைபகுப்பாய்வு அட்டவணை (மீள் பகிர்வு உட்பட)
2. பொருத்தமான மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்
3. அலகு ஒன்றுக்கான மேந்தலைக் கிரயம் (10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

03) வியாபாரமொன்றில் 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் தகவல்கள் பின்வருமாறு கணக்கீட்டு சமன்பாடுகள் காட்டுகின்றன. இவ்வணிகத்தில் அனைத்து பெறுவனவுகள் வங்கி மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அனைத்து கொடுப்பனவுகளும் காசோலை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. பெறுமதி 000 ரூ இல்

மீதிகள் கொடுக்கல் வாங்கல்	ஆதனம் பொறி உபகரணம்	இருப்புக்கள்	வியாபார வருமதிகள்	காசு	வங்கி கடன்	வியாபார, ஏனைய கொடுக்குமதி	மூலதனம்	நிறுத்தி வைத்த வருவாய்
01.01.2023 மீதி	3000	1200	600	400	1200	1000	2000	1000
01				- 300	- 200			- 100
02			- 600	+ 570				- 30
03		- 600		+ 900				+ 300
04				- 720		- 800		+ 80
05		+ 400				+ 400		
06		- 800	+ 1200					+ 400
07							+ 18	- 18
08			- 50			- 50		
09				- 60		+ 40		- 100
10		- 100		- 50			- 150	

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள்:

1. ஆதன பொறி மற்றும் உபகரணங்களுக்கான வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 360 000
2. ஜனவரி மாதத்திற்கான தொலைபேசி பட்டியல் ரூபா 30 000 ஜனவரி 31 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.
3. 2022 டிசம்பர் மாதம் மாற்றப்படாது காணப்பட்ட காசோலை ரூபா 70 000 வங்கியால் மறுக்கப்பட்டமை 2022 ஜனவரி மாத காசு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
4. 2022.01.31 இல் வங்கியால் அனுப்பிய வங்கி கூற்றில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் காசு கணக்கில் சீராக்கப்பட வேண்டியவை.

வங்கிகட்டணம்	ரூபா 3 000
கடன்பட்டோர் நேரடி வைப்பு	ரூபா 80 000
காசோலை புத்தக கட்டணம்	ரூபா 1 000
மாதாந்த நிலையான கட்டளை வைப்பு வட்டி	ரூபா 12 000

5. ஜனவரி 2022 31 வரை சமர்ப்பிக்கப்படாது காணப்பட்ட காசோலை ரூபா 60 000, வசூலிக்கபடாது காணப்பட்ட காசோலை ரூபா 120 000

வேண்டப்படுவது.

1. மேலே 1 தொடக்கம் 10 வரையில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் அதன் பெறுமதிகளுடன் விபரிக்குக.
2. 31.01.2023 முடிவடையும் மாதத்திற்கான வருமான கூற்று.
3. 31.01.2023 இல் திருத்திய காசு கணக்கு.
4. 31.01.2023 இல் உள்ளவாறான வங்கி இணைக்க கூற்று. (மொத்தம் 40 புள்ளிகள்)

04) அ) கீழ்வரும் தகவல்கள் தரு என்பவருக்கு சொந்தமான தனியுடமை வியாபாரமான தரு டிரேடர்ஸின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) 2022 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான தரு டிரோடர்ஸின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு கீழ்வருமாறு,

	வரவு (ரூபா)		செலவு (ரூபா)
2021 ஜனவரி 01ல் மீதி மு.கொ.வ	100,000	2021 ஜனவரி 01 ல் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணம்	75 000
வியாபார வருமதிகளிலிருந்தான பெறுவனவுகள்	2,683,540	வியாபார சென்மதிகளுக்கான கொடுப்பனவுகள்	1,744,301
		வாடகை	180 000
		சம்பளங்களும் கூலிகளும்	360, 000
		மின்சாரம்	27, 000
		தருவினால் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள்	385, 000
		வங்கிக் கட்டணங்கள்	6900
		2021 டிசம்பர் 31 ல் மீதி கீ.கொ.செ	5339
	2,783,540		2783540

(2) 2022 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், வாடிக்கையாளர் ஒருவர் வர்ண வேறுபாடு காரணமாக 125, 000 /= இற்கு கடனுக்கு கொள்வனவு செய்த பொருள்களைத் திருப்பி அனுப்பியிருந்ததுடன் தருவும் அந்தப் பொருள்களின் திரும்பலை ஏற்றுக்கொண்டிருந்தார். எவ்வாறாயினும், இது கணக்கேடுகளில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(3) 2022 டிசெம்பர் 31 மற்றும் 2021 டிசெம்பர் 31 ஆகிய திகதிகளில் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன. (ரூபா)

	2022 டிசெம்பர் 31 இல்	2021 டிசெம்பர் 31 இல்
அலுவலக உபகரணம் - முன்கொணர் பெறுமதி	725 000	700 000
தொக்கு – கிரயத்தில்	341 050	327 250
வியாபார வருமதிகள்	452 800	250 725
காசு கட்டுப்பாடு	5 339	100 000
வியாபார சென்மதி	320 458	150 475
அட்டுறு மின்சாரம்	7 000	16 000

வேண்டப்படுவது,

2022 டிசம்பர் 31 இலான தரு டிரேடர்ஸின் பரீட்சை மீதியை தயாரிக்குக.

(20 புள்ளிகள்)

ஆ) பூபதி விளையாட்டுக்கழகம் என்பது அதன் அங்கத்தவர்களுக்கு விளையாட்டுச் செயற்பாடுகளை வழங்குகின்ற அதேவேளை, அங்கத்தவர்களுக்கான உணவகம் ஒன்றையும் இயக்குகின்ற ஒரு விளையாட்டுக்கழகம் ஆகும். கீழ்வரும் தகவல்கள் பூபதி விளையாட்டு கழகத்தின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) 2022 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான பூபதி விளையாட்டு கழகத்தின் கொள்ளல்களும் கொடுத்தல்களும் (Receipts and payments) கீழ்வருமாறு,

கொள்ளல்கள்	ரூபா
உணவக விற்பனைகள்	1575 000
அங்கத்துவ கட்டணம்	2250 000
விளையாட்டு மைதா. வாடகை வருமானம்	557 000
	4382 000

கொடுத்தல்கள்	ரூபா
சம்பளங்களும் கூலிகளும்	1500 000
உணவகத்திற்கான கொள்வனவு	682 500
கட்டட வாடகை	350 000
மின்சாரமும் நீரும்	291 000
விளையாட்டு மைதான பராமரிப்பு	228 000
	3051.500

(2) விளையாட்டுக் கழகத்தின் ஏனைய சொத்துக்கள் கீழ்வருமாறு,

	2022 டிசம்பர் 31 ல்	2022 ஜனவரி 01 ல்
தொக்கு – உணவகம்	33500	52000
விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதி	1300000	1550000
உணவகத்திலுள்ள தளபாடம் - முன்கொணரற் பெறுமதி	300000	325000

(3) 2022 ஜனவரி 01 ல் எவ்வித அங்கத்துவ கட்டண நிலுவைகளோ அல்லது முன்கூட்டியே பெறப்பட்ட அங்கத்துவ கட்டணங்களோ இல்லை. மொத்த கழக அங்கத்தவர்களான 372 பேரில் 300 அங்கத்தவர்கள் மாத்திரமே 2022 ம் ஆண்டிற்கான தமது அங்கத்துவ கட்டணங்களைச் செலுத்தியுள்ளனர். அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவ கட்டணம் ரூ. 7500/= ஆகும்.

(4) பின்வரும் செலவினங்கள் கீழ்வருமாறு உணவகத்திற்கு பகிரப்பட வேண்டும்.

சம்பளங்களும் கூலிகளும்	30 %
மின்சாரமும் நீரும்	40 %
கட்டட வாடகை	25 %

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(5) ஆண்டின் காலப்பகுதியில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்திற்கு எவ்வித சேர்த்தல்களோ அல்லது அகற்றல்களோ இல்லை.

வேண்டப்படுவது : 2022 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டிற்கான பூபதி விளையாட்டு கழகத்தின் கீழ்வருவனவற்றை தயாரிக்குக.

a) உணவகத்தின் வருமானக்கூற்று
b) வருமான செலவினக் கணக்கு

(20 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

05) அ) வரையறுத்த இந்திரா பொதுக்கம்பனி
2023.03.31 ல் முடிவடந்த ஆண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக் கூற்று. (ரூ.000)

விற்பனை		15000
(-) விற்பனைக் கிரயம்		(6600)
மொத்த லாபம்		8400
(-) விநியோகச் செலவு	1600	
நிர்வாகச் செலவு	1000	
ஏனைய செலவு	400	
நிதிச் செலவு	300	(3300)
வரிக்கு முன்னரான இலாபம்		5100
(-) ஆண்டுக்கான வரி		(600)
வருடத்திற்கான இலாபம்		4500
ஏனைய முற்று மடங்கிய வருமானம்		-
ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்		4500

வரையறுத்த இந்திரா பொதுக்கம்பனி
2023.03.31 மற்றும் 2022.03.31ல் உள்ளவாறான சுருக்கப்பட்ட நிதி நிலமை கூற்று (ரூ.000)

விபரம்	2023.03.31	2022.03.31
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	5 500	8 000
குத்தகைச் சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமை	2 400	-
இருப்புக்கள்.	4 800	2 300
வியாபார வருமதி மற்றும் ஏனைய வருமதிகள்	3 400	2 100
காசும் காசுக்கு சமமானவை	10 300	7 600
மொத்தச் சொத்துக்கள்	26 400	20 000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	11 200	10 000
நிறுத்தி வைத்த வருவாய்	9 200	5 000
வங்கிகடன் 10 %	2 000	2 000
குத்தகைப் பொறுப்பு	2 000	-
சென்மதி வட்டி	-	500
சென்மதி வரி	400	-
வியாபார சென்மதி	1 600	2 500
மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும்	26 400	20 000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள்:

(1) நடப்பாண்டில் கம்பனியானது பொது மக்களுக்கு பங்குகளை வழங்கியது. இதற்காக 12000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைத்ததுடன், மேலதிக விண்ணப்பங்கள் 2000 நிராகரிக்கப்பட்டதுடன், பங்குகளுக்கான ஒதுக்கங்களை உரியவாறு மேற்கொண்டது. வழங்கப்பட்ட பங்கொன்றின் விலை ரூ.100 ஆகும். மேலும் நடப்பாண்டில் ஒதுக்கங்களை மூலதனமாக்கலும் மேற்கொள்ளப்பட்டது.

(2) 2022.04.01 ல் கம்பனியானது 5 வருட சொத்து பயன்படுத்து உரிமை உடன்படிக்கையில் மோட்டர் வாகனமொன்றை பெற்றுக்கொண்டது. இதற்கு ஆரம்ப வைப்பாக ரூ 500 000 செலுத்தப்பட்டது. வருடாந்த தவணை கட்டணம் ரூ 600 000 வருட இறுதியில் செலுத்தப்பட்டது. இம் மோட்டார் வாகன கிரயம் ரூ 3000 000 ஆகும்.

(3) 2023.03.31 ல் ஏற்பட்ட பாரிய விபத்தொன்றில் ரூ 2000 000 கொண்டு செல் பெறுமதியான மோட்டார் வாகனமொன்று முழுமையாக அழிவடைந்தது. இதன்போது, காப்புறுதி கம்பனி கொண்டு செல் பெறுமதியில் 80 % ஐ வழங்குவற்கு உடன்பட்டு வழங்கியது. இது தவிர வேறு எவ்வித சேர்ப்பனவு மற்றும் அகற்றலும் இடம்பெறவில்லை.

(4) விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் முழுவதும் கடன் அடிப்படையில் இடம்பெற்றதாகும்.

(5) இவ் வாண்டில் இடைக்காலப் பங்குலாபம் வழங்கப்பட்டது.

வேண்டப்படுவது,

1. LKAS 7 (காசுப்பாய்ச்சல் கூற்று) நியமத்தின் படி நேரில் முறையில் அமைந்த காசுப் பாய்ச்சல் கூற்று (31.03.2023ல் முடிவடைந்த வருடம்)
2. நிறுத்தி வைத்த வருவாய் கணக்கு
3. குத்தகைப் பொறுப்பு கணக்கு (30 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த நிரோஷன் பொதுகம்பனியின் 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் பின்வருமாறு,

	(ரூ.000)
விற்பனை	30 000
மொத்த இலாபம்	12 000
செயற்பாட்டு செலவினங்கள்	5 000
நிதிச் செலவினங்கள்	1 000
மீள் மதிப்பு மிகை – காணி	2 000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் (2023.03.31) இல்	18 000
வியாபார வருமதிகள் (2022.03.31 இல்)	1 500
வியாபார வருமதிகள் (2023.03.31 இல்)	2 500

மேலதிகத் தகவல்கள் :

1. கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் கடன் அடிப்படையில் இடம்பெற்றதாகும்.
2. கம்பனி வரி விலக்களிப்பு காலத்தில் செயற்படுகிறது.
3. கம்பனி நடப்பாண்டில் ரூ 18 000 00 ஐ பங்கிலாபமாக செலுத்தியது.
4. 2023.03.31 இல் நிறையளிக்கப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 1200 000 ஆகும்.

வேண்டப்படுவது,

1. மொத்த இலாப வீதம்
2. தேறிய இலாப வீதம்
3. வியாபார வருமதிகள் புரள்வு வீதம்
4. பங்கொன்றுக்கான உழைப்பு
5. பங்கொன்றுக்கான பங்கிலாபம்

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06) அ) அன்பு, பண்பு, பாசம் ஆகியோரால் நடாத்திச் செல்லப்படும் பங்குடமை வணிகத்திலிருந்த பின்வரும் தகவல்கள் 01.04.2022 இல் தரப்பட்டுள்ளன.

(ரூ 000)

<u>சொத்துக்கள்</u>

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	12 000
12 % முதலீடு	7 000
இருப்புக்கள்	700
வியாபார வருமதிகள்	600
காசும் காசுக்கு சமமானவை	500
	20 800

<u>உரிமையும் பொறுப்பும்</u>

உரிமையாண்மை -	அன்பு	6 500
	பண்பு	5 000
	பாசம்	2 800
20 % வங்கிக்கடன்		6 000
வியாபார சென்மதிகள்		500
		20 800

மேலதிக தகவல்கள்

(1) அன்பு, பண்பு, பாசம் பங்குடமை ஒப்பந்தம் வருமாறு,
அ) இலாபநட்ட விகிதாசாரம் முறையே 2:2:1 என்றவாறு பகிரப்படும்.
ஆ) ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தம் ரூ 20 000 சம்பளம் பெற உரிமை உடையவர்கள்.
இ) ஆரம்ப மூலதன மீதிகளுக்கு 10 % வட்டி வழங்கப்படும்.
ஈ) பங்காளரால் வழங்கப்படும் முற்பண கடன்களுக்கு 12 % வட்டி வழங்கப்படும்.

(2) 2022.04.01 இல் உள்ள பங்காளர் உரிமையாண்மை மீதியில் உள்ள மூலதனக்கணக்கு மீதிகள் பின்வருமாறு,

மூலதனக் கணக்கு	(ரூ 000 ல்)
அன்பு	5 000
பண்பு	4 000
பாசம்	3 000

(3) 2023.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமை வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு,

விபரம்	(ரூ000)
விற்பனை (70 % கடன் அடிப்படையில்)	10000
கொள்வனவு (60 % கடன் அடிப்படையில்)	4000
கடன்படுநரிடம் சேகரிப்பு	7100
கடன்கொடுநருக்கு கொடுப்பனவு	2300
செயற்பாட்டு செலவு கொடுப்பனவு	1200
ஆதனம் பொறி உபகரணத் தேய்வு	300
பற்றுக்கள் (ஒவ்வொரு பங்காளரும் ரூ 50 000 படி)	150

(4) 2023.03.31 இல் இருப்பின் பெறுமதி ரூ 800 000 ஆகும்.
(5) செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினுள் அன்புவின் தனிப்பட்ட வருமான வரிக்கொடுப்பனவு ரூபா 50 000 உள்ளடக்கப்பட்டுள்ளது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(6) 2022.10.01 இல் பண்பு தனக்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றை வணிகத்தில் ஈடுபடுத்தினார். அதன் கிரயம் 2200 000 மற்றும் எஞ்சிய பெறுமதி ரூ 200 000 ஆகும். அதன் பயன்தரு ஆயட்காலம் 5 வருடங்கள் ஆகும். மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும். இது தொடர்பில் எப்பதிவும் ஏடுகளில் இடம்பெறவில்லை.

(7) பாசத்தினால் 01.01.2023 இல் ரூபா 500 000 கடனாக வழங்கப்பட்டது. இது தொடர்பில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

(8) முதலீட்டுக்கான வட்டி வருமானம் பெறவேண்டியுள்ளதுடன், வங்கி கடன் வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை.

(9) 31.03.2023 இல் பாசம் பங்குடமையில் இருந்து ஓய்வு பெற்றார். அத் தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 2000 000 என மதிப்பிடப்பட்டது. அத் தினத்தில் அன்பும், பண்பும் இலாப நட்டங்களை சமனாக பகிர இணங்கினர். அத்தினத்தில் பாசத்துக்கு செலுத்த வேண்டிய தொகையில் 50 % காசாக செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய 50 % தொகை கடன் கணக்கிற்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

வேண்டப்படுவது,

1. 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமையின் வருமானக் கூற்று (பகிர்வு உட்பட)
2. 31.03.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் மூலதனக் கணக்கு, நடைமுறைக்கணக்கு, பாசம் கடன் கணக்கு.
3. 31.03.2023 இல் பின்வரும் கணக்கு மீதிகள்.
   (1) வியாபார வருமதிகள்
   (2) வியாபார சென்மதிகள்
   (3) ஏனைய பெற வேண்டியவைகள்
   (4) ஏனைய செலுத்த வேண்டியவைகள் (ஏனைய சென்மதிகள்)

(30 புள்ளிகள்)

ஆ) விநாயகம் கம்பனியின் 31.03.2023 ல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபம் ரூ. 250 000 காட்டியது. அதனைத் தொடர்ந்து பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) 2023 மார்ச் மாதத்திற்காக செலுத்திய வாடகைக்குரிய, காசோலை ரூ 21000 வங்கியால் மறுக்கப்பட்டமை காசுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் வாடகைக் கணக்கின் செலவில் ரூபா 12000 எனப் பதியப்பட்டது.

(2) வங்கிக் கடன் தவணைப் பணம் ரூபா 12000 வட்டி உட்பட ரூ 60000 செலுத்தப்பட்டது. இத்தவணைப் பணம் முழுவதும் வங்கிக் கடன்கணக்கில் வரவில் பதியப்பட்டது. எனினும் காசுக் கணக்கில் சரியாக பதியப்பட்டது.

(3) கடன்கொடுநருக்கு திருப்பி அனுப்பிய பண்டங்கள் ரூபா 20 000 சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிந்த போதிலும் வெளித்திரும்பல் கணக்கில் செலவில் ரூபா 2000 எனப்பதியப்பட்டது.

(4) கொடுத்த கழிவு நிரலின் மொத்தம் ரூபா 12500 பொதுப்பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றப்படவில்லை.

(5) 01.10.2022 இல் அலுவலக பயன்பாட்டுக்கு வாங்கிய காரியாலய உபகரணம் ரூபா 40 000 தவறுதாலாக கொள்வனவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டு இருந்தது. காரியாலய உபகரணங்களுக்கு இலகுவழி முறையில் 10 % தேய்விடப்பட்டு வருகின்றது.

வேண்டப்படுவது,

1. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு
2. வழுக்கள் சீராக்கத்தின் பின் இலாபம் (10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)